செ.வெ.எண்.45 நாள்: 17.09.2017

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் இடுக்கன்குளத்தில் பேரிடற்,பாதுகாப்பு திறன் வளர்ப்பு பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு பூ.முத்துராமலிங்கம் அவர்கள், **சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ், இ.ஆ.ப., அவர்கள்**ஆகியோர் துவக்கி வைத்தனர்.

---

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் இடுக்கன்குளம் பால கிருஷ்னா மேல் நிலை பள்ளியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஸ்ரீ சத்யசாய் பேரிடற் மோலாண்மை குழு இணைந்து கடற்கரை -குடியிருப்புகளில் வசிக்கும் மக்களுக்கு ,பேரிடற் பாதுகாப்பு திறன் வளர்ப்பு பயிற்சி இன்று 17-09-2017 நடைபெற்றது.இப்பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் (பொறுப்பு) மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் திரு பூ.முத்துராமலிங்கம் அவர்கள், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ், இ.ஆ.ப.,அவர்கள் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

இப்பயிற்சியில ்இராதாபுரம் வட்டத்தில் உள்ள கடற்கரைகிராமங்களான குட்டம்,கரைசுத்துஉவரி,கரைசுத்துப்புதுர்,திருவம்பலபுரம்,விஜியாபதி,செட்டிகுளம்,லெவிஞ்சிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பேரிடற் மோலாண்மை முதன்மை பொறுப்பாளர்கள் 85 நபர்கள் பங்கேற்றனர். இப்பயிற்சியில் பேரிடற் அபாய தற்காப்பு ஒத்திகை, முன்னெச்சரிக்கை அணி உறுப்பினர்கள் செய்யவேண்டிய ஒத்திகை,புயல் பாதுகாப்பு ஒத்திகை,கிராம பேரிடற் மேலான்மை குழு உறுப்பினர்கள் செய்யவேண்டிய முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள் முதலுதவி தொடர்பான ஒத்திகை,வெள்ள மீட்பு ஒத்திகை,சுனாமி முன்னெச்செரிக்கை நடவடிக்கைகள்,தீ விபத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் உள்பட பல்வேறு பேரிடற் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீசத்ய சாய் பேரிடற் மோலாண்மை குழு ஒருங்கினைப்பாளர் திரு சுரேஷ், மீன் துறை ஆய்வாளர் திரு கார்த்திகேயன் ,பனங்குடி காவல் ஆய்வாளர் ஸ்டிபன் ஜான்ஸ், வட்டார மருத்துவ அலுவலர் மரு. கோலப்பன்,தீயணைப்பு அலுவலர் இமானுவேல் மற்றும் அலுவலர்கள்,பேரிடற் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :** செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி